


உணவு பூமியிலிருந்து உற்பத்தியாகிறது; ஆனால் பூமியோ ஆதாமின் கீழ்ப்படியாமையின் நிமித்தம், சபிக்கப்பட்டதினால், அதிலிருந்து உருவாகும் எல்லாம் சாபத்தின் பலனாக வெளிப்படுகின்றது. முதலாவதாக அவை ஆசிர்வதிக்கப்பட வேண்டும். ஆகையால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், ஸ்தோத்திரம் செலுத்தாமல் எந்த பொருளையும் வாயில் அனுமதிக்க கூடாது. நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இத்தகைய நற்காரியங்களை செய்து, ஒரு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியதை வேதத்திலே வாசிக்கலாம். மூன்று நாளாய் சாப்பிட ஒன்றுமில்லாத சூழ்நிலை; நாளாயிரம் பேருக்கும் அதிகமான ஜனங்கள்; இருந்ததோ ஏழு அப்பங்கள்; ஆனால் தேவக்குமாரனின் விசுவாசமோ மிகவும் பெரியது. அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டு அதை சீஷர்களிடம், ஜனங்களுக்கு பரிமாறும்படி கொடுத்தார் (மாற்கு 8:6).

பாருங்கள், எல்லோரும் திருப்தியாக சாப்பிட்டு மீதம் இருந்த உணவை, ஏழு கூடைகளில் நிரப்பியதாக வாசிக்கின்றோம். கர்த்தருக்குப் பிரியமான தேவ ஜனமே, இதிலிருந்து நாம் கற்றுக்கொள்கின்ற பாடம் என்ன? சரீரம் இருக்கிறவரையில் பசிவரத்தான் செய்யும்; ஆத்துமா இந்த உலகைவிட்டு செல்லும் வரையில், ஆவிக்குரிய போராட்டம் தொடர்ந்து கொண்டுத்தானிருக்கும். சரீரமும் வளர வேண்டும், ஆத்துமாவும் வளர வேண்டும். தேவன் ஆத்தும வளர்ச்சிக்கு முதலிடம் அளித்துள்ளதை இங்கே நாம் தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம். மனித சரீரம் அசுத்தப்படுத்தப்பட்டு, சபிக்கப்பட்ட பொருள்களால் வளர்ந்துள்ளது; தேவன் இந்த அசுத்தப்பட்ட சரீரத்தை தமது ஆலயமாக மாற்ற, தமது பரிசுத்த ஆவியானவரைக்கொண்டு, தம்முடைய ஜீவனுள்ள வார்த்தைகளை ஒவ்வொரு மனித உள்ளத்திலும் விதைக்கின்றார். பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளத்துக்குள் பிரவேசிக்கும் நேரம், இதயம் ஆத்துமாவுடனும், ஆத்துமா மனதுடனும், மனம் ஆவியுடனும், ஒழுங்கும் கிரமுமாக இணையும்படி செய்கின்றார். சுயசித்தத்தை (freewill) தேவ ஆவியானவருக்கு ஒப்புக்கொடுப்பது ஒன்றுதான் நாம் செய்யும் காரியம். அதன்மூலம், தேவ சித்தம் நம் வாழ்வில் நிறைவேற இடம் கொடுக்கின்றோம்.

நாம் பரிசுத்தமாகுதல், தேவனின் கிருபையும், இரக்கமுமாகும். ஆத்துமா பரிசுத்தமடையும் நேரம், நாம் தேவனோடு உறவாடும் காலம்; அப்பொழுது சரீரம் தாழ்வு நிலையடைய, நாம் உபவாசிக்க வேண்டும்.

யோவேல் 2:11-13

*கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதை சகிக்கிறவன் யார்? ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களை கிழித்து, உங்கள் தேவனாகிய கர்தரிடத்தில் திரும்புங்கள், அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவருமாயிருக்கிறார்.*

இந்த வேதப்பகுதியை நாம் தியானிக்கும் வேலையிலே, பல பாடங்களை கற்றுக்கொள்கிறோம்.

### முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புதல்

- இயேசுவை சரீரத்தில் தரிப்பித்திருந்தால் அதை மாம்சத்தின் இச்சைகளுக்கு ஒப்புகொடுக்கமாட்டோம்.
- இயேசுவை ஆத்தும நேசராக கொண்டிருந்தால், அங்கே பாவ உணர்ச்சிகள் எழும்பாது; பரிசுத்த உணர்வுகளே நிலைத்திருக்கும்.
- இயேசு ஒருவரே நம்மை ஆவியில் உயிர்ப்பிக்கிறவராக இருக்கிறார்.

நமது இருதயம், தேவ ஆலயத்தின் பலி பீடமாக உள்ளது.

ஆம் பிரியமானவர்களே, ஆலயமாகிய நமது சரீரத்தில் தேவ ஆவியாயானவர் வாசம் செய்யுமிடம் இருதயம். அப்படியென்றால், முழுமையாக இருதயத்தை கர்த்தரிடத்தில் திருப்புவது என்பது, நமது சரீரம், ஆவி, ஆத்துமா, அனைத்தையும் ஒப்படைப்பதற்கு சமம்.

### இருதயங்களை கிழித்து கர்த்தரிடத்தில் திரும்புங்கள்

பாவம் நீக்கப்பட, இரத்தம் சிந்தப்பட வேண்டும்; ஆனால் சிந்தப்படுகிற இரத்தம் பரிசுத்தமானதாக இருக்க வேண்டும். நமது வலது நுரையீரலில் இரத்தம் அசுத்தமாக உள்ளது; இடதுபுறம் பரிசுத்தமாகுகின்ற நிலையிலேயுள்ளது; ஆனால் இருதயத்திலோ, அது பரிசுத்தமான நிலையில், உயிரைக்காக்கும் ஜீவனைக்கொண்டதாக உள்ளது. அதனால், இருதயத்தை கிழிக்கும் போது, இரத்தம் சிந்தப்படும்; அதனால் கிருபாசனம் கழுவப்பட்டு பரிசுத்தபடுத்தப்படும். வஸ்திரங்களை கிழித்தால் நிர்வாணம் வெளிப்படும்; நிர்வாணம் பாவத்தின் அடையாளம் (ஆதியாகமம் 3:7; 9:22; II சாமுவேல் 11:2-4). ஆனாலும் ஆதிகாலங்களிலே, தேவ ஜனங்கள், தங்கள் பாவ வாழ்க்கையின் பலனாக,

துன்பத்தின் பாதையிலே கடந்துபோகிற வேலையில், வஸ்திரங்களை கிழித்து, தேவனிடம் புலம்புவதை நாம் வேத்திலே வாசிக்கலாம். அது பாவத்தை ஒப்புக்கொள்ளும் ஒரு வெளிப்பாடு. ஆதாம் ஒளியின் வஸ்திரம் தரித்திருந்தான்; பாவத்திற்குள் விழுந்தவுடன், நிர்வாணியானான். ஆனால் மனப்பூர்வமாக அவன் பாவ அறிக்கை செய்யவில்லை. ஏன்? அவனது இருதயம் கிழிக்கப்படவில்லை. உண்மையான பாவ அறிக்கை என்பது, இருதயத்தை கிழிப்பதே; அது இதயத்தின் கதறுதல்; மனம் கசந்து புலம்புதல்; தேவ அன்பிற்காக ஏங்குதல். இத்தகைய காரியங்கள் நடந்தேற, உபவாசம் மிகவும் அவசியமாகின்றது.

### தேவ-மனித உறவின் மூன்று படிகள்:



- **உபவாசம்** - சரீரத்தில்: இது சரீரத்தின் ஆசைகளை ஒடுக்குதலை ஊக்குவிக்கிறது
- **அழுகை** - ஆத்துமாவில்: இது பரிசுத்த உணர்வுகளை தோற்றுவிக்கிறது
- **புலம்பல்** - ஆவியில்: இது கர்த்தரிடம் உண்மையை பேசுவது

முடிவோ!

- ஆனந்தம், மகிழ்ச்சி, சந்தோஷம்
- சமாதானம்
- ஆசிர்வாதம்

சற்று கூர்ந்து நோக்கினால், ஒரு உண்மை புரியும். உபவாசத்தில் ஆரம்பித்து, அழுகையில் தொடர்ந்து, புலம்பலில் முடியும் உறவு, தேவ பர்வதத்திலிருந்து கொண்டு வரும் பலன்; முதலில் ஆவியில் உயிர்ப்பிக்கப்படுதல்; இரண்டாவது ஆத்துமாவில் சமாதானம் அடைதல்; மூன்றாவதாக சரீரத்தில் ஆசிர்வாதம் பெறுதல்.

### எதற்காக, எப்படி, எப்பொழுது உபவாசிக்க வேண்டும்?

இப்படிப்பட்ட எண்ணங்கள் நம் உள்ளத்திலே எழுவதுண்டு.

### எதற்காக மனிதனுக்கு உபவாசம் தேவை?

சரீரம் நிலையற்றது; ஆவியும், ஆத்துமாவும் நிலைப்பெற்றது (நித்தியமானது). அதனால் ஆவியும் ஆத்துமாவும், தேவனுடன் சஞ்சரிக்க (உறவாட) வேண்டும். எதற்காக? பரலோகத்திலே, தேவனை ஆராதிக்கும்பொழுது, நாம் தேவபக்தியுள்ளவர்களாக, எல்லா நற்குணங்களோடும் நமது பரம தந்தையை மகிழ்விக்க, தேர்ச்சிப்பெற்றவர்களாகும் பொருட்டு, ஆவியானவர்தாமே நம்மை இந்தப்பூவுலகிலே பயிற்றுவிக்கிறார். சரீரம் மேலோங்கி இருந்தால், அதன் தேவைகளும் பலத்திருக்கும். ஆகையால் ஆத்துமாவின் தேவைகள் அங்கே சற்று குறைந்து காணப்படும் அல்லது இல்லாமற் போகும் நிலை ஏற்படும். அதற்காகத்தான்,

தேவன் இப்படிப்-பட்ட ஒரு ஏற்பாட்டை வைத்திருக்கின்றார்.

- முதலாவது ஆத்துமாவில் பரிசுத்த உணர்வுகள் உருவாகவும்;
- ஆவியிலே உயிர்ப்பெறவும், அதாவது தேவ பெலத்தை பெற்றுக் கொள்ளவும;
- சரீரத்தின் தேவைகளை குறைக்-கவும், அதாவது சபிக்கபட்ட பூமியின் பொருள்களால் அதை நிரப்பாமல் இருக்கவும், உபவாசம் உதவுகிறது.

## எப்படி உபவாசிக்க வேண்டும்?

மத்தேய 6:16-18

நம்முடைய நோக்கம், சரீரத்தை தேவனுடைய ஆளுகைக்கு ஒப்பு கொடுப்பது; அதற்கு நாம் தொடர்புகொள்ளப்போவது உன்னத-மானவரை (இயேசுவை). பழுதடைந்த ஆத்துமாவையும், செத்த ஆவியையும் சரி செய்வதற்காகவும்; தேவ சேவையில் பங்கெடுத்து கொள்ள பயிற்சி பெறவும் நாம் உபவாசிக்கின்றோம். அதனால், சந்தோஷமாக நாம் தேவனுடைய பாதத்தில் அமர வேண்டும். மனுஷர் காணும்படியான உபவாசம், சபைகளிலே, கூட்டங்களிலே தேவையாயிருக்கின்றது. அது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பரிசுத்தமாக்க உதவுகின்றது. இவ்வகை உபவாசம், தேச நலனுக்காக, ஆத்தும மீட்பிற்காக, சபைக்கு விரோதமான காரியங்களை ஒடுக்குவதற்காக, சக விசுவாசிகளின் ஷேமத்திற்காக ஏறெடுக்-கப்படுகின்றது.

- கிறிஸ்துவின் சபை - சரீரம் - அது ஆலயம் (Being Fruitful)
- கிறிஸ்துவின் சபை - இயேசுவின் குடும்பம் - அது தேவபர்வதம் (Multiplication)

## எப்படி கிறிஸ்துவின் சபையாவது?

**சரீரத்தை சுத்தம் செய்ய வேண்டும்** (யாத்திராகமம் 19:14,15)

முகத்தை அலம்பி, தலையில் எண்ணெய்ப்-பூசி, ஆடைகளை துவைத்து அணிதல் வேண்டும்.

**ஆத்துமாவை சுத்தம் செய்ய வேண்டும்**

வேதத்தை படித்து அல்லது கேட்டு, தியானிக்க வேண்டும்; தேவனின் வார்த்தைகள் வல்லமையுள்ளவைகள்; அவைகளை தியானிக்கும் வேலையில், மனம் பக்குவமடைகிறது; அதனால் நமது பரம தந்தையின் பண்புகள், உணர்வுகளாக ஆத்துமாவில் எழும்பி, நல்ல நினைவு-களை இதயத்தில் உற்பத்தி செய்ய, ஆவியும், ஆத்துமாவும் பரிசுத்தமடை-கிறது. இந்த நிகழ்வு, எலும்புகளையும், நரம்புகளையும், சதைகளையும், ஆனந்த களிப்பினால் நிரப்புகிறது.

## எதற்காக ஜெபிக்க வேண்டும்?

ஜெபிக்கும்போது, ஆவியானவர் நாம் உருவாக்கிய தேவனின் குணாதி-சியங்களை (பண்புகளை) நம்மிலே இயக்குகின்றார். இதை எப்படி புரிந்து கொள்வது? வேத வசனங்கள் இருபுறமும் கருக்குள்ளது. அது உள்ளும், புறம்பும் சுத்தம் செய்வதைக்காட்டுகின்றது. ஆத்துமா பரிசுத்தமடையும்போது பரிசுத்த உணர்வுகள் எழும்புகின்றது; அவை சுத்தமான பண்புகளை (Characters) உருவாக்குகின்றது. பரிசுத்த பண்புகள் வெளிப்படும்போது, சரீரம் சுத்தமடை-கின்றது. நமது செயல்கள் அதற்கு சாட்சிகள். வசனங்களை படிப்பதினால் மாத்திரமோ அல்லது கேட்பதினால் மாத்திரமோ, நாம் தேவ சாயலை உருவாக்க முடியாது. தேவ சாயல் இயேசுவின் ரூபம். தொடர்ந்து தேவனின் வார்த்தைளை தியானிக்கும்போதுதான் நம்மால் தெய்வீக குணங்களை உருவகப்படுத்தி மனக்கண்ணால் பார்க்க முடியும். ஏனோக்கு இதைத்தான் செய்து கொண்டிருந்தார்; பரலோகத்திற்கு எடுத்-துக்கொள்ளப்பட்டார் (ஆதியாகமம் 5:24). எலியா, நம்மைப்போல பாடுள்ள மனுஷனாக இருந்தும், எப்பொழுதும் தேவனோடு சஞ்சரித்து வந்ததால், பரலோகத்திற்கு ஏறிப்போனார் என்று வாசிக்கின்றோம் (II இராஜாக்கள் 2:11). அப்படியென்றால், நாம் தேவசாயலை தரித்துக்கொள்ள, தேவனோடு சஞ்சரிக்க வேண்டும். தேவசாயலை அடையாமல் நாம் பரலோகத்திற்கு செல்லவே முடியாது (யோவான் 3:5). எவ்வளவு நேரம் ஜெபிக்கின்றோமோ, அவ்வளவு காலம் தேவனோடு உறவாடுகின்றோம். தேவ பிரசன்னம் நம்மில் நிலைத்திருக்க உபவாசம் உதவுகிறது.

## எப்பொழுது உபவாசிக்க வேண்டும்?

நமக்கு தேவைகள் வரும்போது, கஷ்டங்கள் நேரும்போது மட்டும் உபவாசிக்கும் பழக்கம், தேவனுக்கு பிரியமான ஒன்றல்ல. ஏனென்றால், நமக்கு துன்பங்களோ, தொல்லைகளோ, கஷ்டங்களோ, எதனால் வருகின்றது? *தேவன் பட்சத்தில் நாம் இருக்கும்போது, நம்மை ஆதரிப்பவர்கள் மத்தியில், எப்பொழுதும்,அவர் நம் பட்சத்தில் இருக்கின்றார்.* நம்மைவிட்டு விலகாமலும், கைவிடாமலும், எல்லா சூழ்நிலையிலும் காத்து வழி நடத்துகின்றார்.

## பிறகு எப்படி நமக்கு கஷ்டம், துன்பம், நோய்கள்?

யாத்திராகமம் 15:26; 23:20-23, இந்த இரண்டு இடங்களிலும், தேவன் தமது நிலையை தெளிவுபடுத்தியிருக்கின்றார். நாம் அவருடைய வார்த்தைக்கு செவி கொடுத்து, நமது வாழ்வில் விசுவசத்துடன் அவைகளை பின்பற்று-வோமென்றால், நிச்சயமாக நமது இரட்சகரும், மீட்பருமாகிய இயேசு-வானவர், நம்மை எல்லா இக்கட்டு-களிலிருந்தும் விடுவித்து, கரம்பிடித்து நடத்திடுவார். *நம்மில் அநேகர் இருதய சோதனையையும், உலக சோதனையையும், சரியாக புரிந்து கொள்வதில்லை.* நாம் உலக காரியங்களில் அதிகம் பிரியம்

வைக்கும்போது, தேவ பயம் குறைகின்றது. அது எப்படி? தேவ பண்புகள் நம்மில் குறைந்து, பெலவீனமடைகிறோம். ஆவி பெலவீனமடைந்தால் மாம்சத்திற்கு கொண்டாட்டம்தானே!

தேவன் அப்பொழுது, 'மகனே, மகளே, சற்றே நிதானமாய் உன்னை விசாரி', என்று எச்சரிப்பதே, உலக சோதனை. உலக சோதனை, சோதனைக்காரனால் (பிசாசினால்) உருப்பெறுகின்றது. சும்மா விடுவானா? நம் கர்த்தர் கூறியது போல, சுளகினால் கோதுமையை புடைப்பது போல புடைத்து எடுக்கிறான்; அலறி அடித்து, மறுபடியும் இயேசுவிடம் ஓடுகின்றோம். யாக்கோபு 1:13,14ன் படி, நமது சுய இச்சையினாலே (desire on our freewill), இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகின்றோம். தேவன் இதிலிருந்து விடுபட, நமக்கு அதிகாரத்தை கொடுத்திருக்கிறார்; அதுதான் மனசாட்சி (freewill). *கண்களின் இச்சைகளை அனுமதிப்பதா, இல்லையா என்று நாம்தானே தீர்மானிக்கின்றோம்.*

இதில் தேவனின் பங்கு என்ன?

அவர் அதிகாரத்தை நம்மிடம் கொடுத்து விட்டு, நமது கட்டளைக்கு காத்திருக்கின்றார்.

ஏசாயா 45:11

'வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்; என் பிள்ளைகளைக்குறித்தும், என் கரங்களின் கிரியைகளைக்குறித்தும் எனக்கு கட்டளையிடுங்கள்',

என்று சர்வவல்ல தேவன் நம்மைபார்த்து கேட்கின்றார்.

நாம் தேவனைப்பற்றும் அறிவிலே வளரும்போது, அவர் எவ்வளவு உண்மையுள்ளவர் என்று அறிந்து கொள்கின்றோம். ஆனால், நமது தேவைகளுக்கு உலகத்தை நாடும்போது, சோதனையைக் கடக்கத்தான் வேண்டியுள்ளது. *சோதனை நமது சுயாதீனத்தின் முயற்சி; சோதனையில் வெற்றி தேவ கிருபையின் பயிற்சி; இந்த பயிற்சிக்கு உதவுவதுதான் உபவாசம்.* அதனால், வாரத்தில் ஒருமுறையாவது உபவாசித்து ஜெபிப்பது, வெற்றியுள்ள வாழ்கைக்கு சிறந்த வழியாகும்.




கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

அல்லேலுயா.